# ஈரோடு மாநகராட்சி
# மாமன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்
# திருவள்ளுவராண்டு 2046 பங்குனித் திங்கள் 16–ம் நாள்

**2015–ம் ஆண்டு மார்ச் மாதம் 30–ஆம் தேதி (30.03.2015) திங்கட்கிழமை பகல் 12.15 மணிக்கு மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற மாமன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

*******

**1. மாண்புமிகு மேயர், மரியாதைக்குரிய துணை மேயர், 3–வது மண்டலத் தலைவர் திரு. இரா. மனோகரன் மற்றும் 34–வது மாமன்ற உறுப்பினர் திருமதி. பி. பூமதி ஆகியோர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**

- ஈரோடு மாநகராட்சி மண்டலம் 3–க்குட்பட்ட பெருந்துறை பிரதான சாலையில் பழையபாளையம் பிரிவில் இருந்து நல்லியம்பாளையம் செல்லும் சாலையில் வேல்நகர் சந்திப்பிலிருந்து கிழபுறமாக ஒடையை ஒட்டி பிரிந்து செல்லும் மண் சாலை நல்லியம்பாளையம் ஆரம்பப்பள்ளி அருகில் இணையும் சாலையானது சுமார் 1.700 கி.மீ நீளம் கொண்டதாக உள்ளது. தற்போது மேற்படி சாலை முட்புதர்களால் மூடப்பட்டு போக்குவரத்திற்கு உபயோகமின்றி உள்ளது. இச்சாலையை தார்சாலையாக்கும் பட்சத்தில் பெருந்துறை சாலை மற்றும் சென்னிமலை சாலையை இணைக்கும் விதமாகவும், மாநகரில் போக்குவரத்து நெரிசல் மற்றும் பொதுமக்களுக்கு போக்குவரத்து தூரம் குறையவும், ஈரோடு மாநகரில் முக்கியமான இணைப்பு சாலையாக அமையும். மேலும் இச்சாலையில் உள்ள ஓடையின் குறுக்கே உயர்மட்ட பாலம் அமைக்கும் பட்சத்தில் முத்தம்பாளையம் வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதி–1–யை இணைக்கும் சாலையாகவும் அமையப்பெற்று பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் ஏற்புடையதாக அமையும். எனவே மேற்படி சாலையை தார்சாலையாக அமைக்கவும் மற்றும் ஓடையின் குறுக்கே உயர்மட்ட பாலம் அமைக்கவும் இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**297. மாண்புமிகு மேயர் அவர்கள் முன்மொழிய மரியாதைக்குரிய துணை மேயர் அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**2.** ஈரோடு மாநகராட்சி, சூரியம்பாளையம் கிராமம், ரீ.ச.எண்.147/1, கொப்புவாய்க்காலை எஸ்.பி. டெக்ஸ் நிறுவனத்தார் எடுத்துக் கொண்டு ரீ.ச.எண்.97/1ஏ, 147/2ஏ, 3ஏ ஆகிய காலைகளில் வாய்க்கால் அமைக்க பரிவர்த்தனை கோரி, ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ந.க.எண்.2349/2012/உ1, நாள் 27.02.2015–ல் மாநகராட்சியின் தீர்மானம் அனுப்பி வைக்கும்படி கோரப்பட்டுள்ளது.

ஈரோடு மாநகராட்சி சூரியம்பாளையம் கிராமம், ரீ.ச.எண்.147/1–ல் உள்ள கொப்பு வாய்க்காலை எஸ்.பி. டெக்ஸ் நிறுவனத்தார் எடுத்துக் கொண்டு ரீ.ச.எண்.97/1ஏ, 147/2ஏ, 3ஏ ஆகிய காலைகளில் வாய்க்கால் அமைக்க பரிவர்த்தனை செய்து கொள்ள ஈரோடு மாநகராட்சிக்கு எந்தவித ஆட்சேபனை இல்லை என தெரிவிக்க மாமன்றத்தின் பரிசீலணைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**இ3/1454/15**

**298. சூரியம்பாளையம் கிராமம் ரீ.ச.எண்.147/1 கொப்பு வாய்க்காலை எஸ்.பி.டெக்ஸ் நிறுவனத்தார் எடுத்துக் கொண்டு ரீ.ச.எண்.97/1ஏ,147/2ஏ, 3ஏ ஆகிய காலைகளில் எஸ்.பி. டெக்ஸ் நிறுவனத்தார் வாய்க்கால் அமைக்க பரிவர்த்தனை செய்து கொள்ள இம்மாநகராட்சிக்கு எந்த வித ஆட்சேபனையும் இல்லை எனத் தீர்மானிக்கப்பட்டது.**

**3.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–1க்குட்பட்ட வார்டு எண்.1 சானார்பாளையம் மாரியம்மன் கோவிலில் இருந்து உரக்கடை மெயின்ரோடு வரை உள்ள பகுதியில் தார்சாலை பழுதடைந்து குண்டுங்குழியுமாக உள்ளது. மேலும் அப்பகுதியில் மழைநீர் வடிகால் இல்லாத காரணத்தால் கழிவுநீர் தேங்கி நின்று துர்நாற்றம் வீசி தொற்று நோய் ஏற்படும் அபாயம் உள்ளது. இந்நிலையில் மேற்படி பகுதியில் மழைநீர் மற்றும் தார்சாலை அமைக்க பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2014–15ன் கீழ் ஈரோடு தொகுதி மக்களவை உறுப்பினர் அவர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.7.00 லட்சம் ஒதுக்கீடு செய்து பரிந்துரைத்ததின் பேரில் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர்/தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்கள் ந.க.எண். 3492/2014/அ9 நாள் 17.03.2015–ல் மேற்படி பணி மேற்கொள்ள ரூ.14.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளார். இப்பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.14.00 லட்சம் ஆகும். எனவே பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2014–15ன் கீழ் ஒதுக்கீடு தொகை ரூ.7.00 லட்சம் போக பணி மேற்கொள்ள ஆகும் கூடுதல் செலவினம் ரூ.7.00 லட்சத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. அனுமதி வழங்கலாம்.
2. பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2014–15ன் கீழ் ஒதுக்கீடு தொகை ரூ.7.00 லட்சம் போக மேற்படி பணியினை மேற்கொள்ள ஆகும் கூடுதல் செலவினம் ரூ.7.00 லட்சத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**( இ1/3734/14 )**

**299. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**4.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (மேற்கு) 2014-15-ன்கீழ் மேற்கொள்ளும் பணிக்கு ந.க எண். 1823/2014/அ3, நாள்: 21.02.2015-ல் மாவட்ட ஆட்சித் தலைவர்/தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஈரோடு மாவட்டம் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி ஈரோடு மாநகராட்சி மண்டலம்- II-க்குட்பட்ட வார்டு எண்.16 கொளத்துப்பாளையம் பகுதியில் சமுதாயக்கூடம் கட்டுதல் பணி ரூ.20.00 இலட்சத்திற்கு 16.03.2015-தேதியன்று E-Tendering முறையில் முதலாம் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் 17.03.2015- தேதியன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை எடுத்துக்-கொள்ளப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும் போது பெறப்பட்ட விபரம் கீழ்கண்டவாறு.

| | |
|---|---|
| 1) திருவாளர்கள்.<br>எம்.ஆர்.எம். கன்ஸ்ட்ரக்சன்ஸ் | (-) 0.05% சதவீதம் எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு |
| 2) திரு. டி.விஜயகுமார் | (+) 1.47% சதவீதம் எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களும் ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 1சதவீதம் டேவணித்தொகை வழங்கியுள்ளார்கள். பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (-)0.05% சதவீதம் குறைவானதாகவும் உள்ள M/s. எம்.ஆர்.எம். கன்ஸ்ட்ரக்சன்ஸ் அவர்களை, மேலும் விலையைக் குறைத்துக் கொடுக்க இயலுமா என, இவ்வலுவலக கடிதம் எண்.இ1/1989/2014-ன்படி கேட்பு அறிவிப்பு 17.03.2015 அன்று கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 20.03.2015 தேதிய கடிதத்தில், வேலை ஆட்களின் கூலி மற்றும் கட்டுமான பொருட்களின் விலை உயர்ந்துள்ளதால் தற்போது மேலும் குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார். எனவே பணியின் அவசர அவசியம் கருதி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மற்றும் எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டினை விட குறைவான **(-) 0.05%** சதவீதத்தில் கோரியுள்ள திருவாளர்கள். எம்.ஆர்.எம். கன்ஸ்ட்ரக்சன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு—

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/1989/2014**

**300. அனுமதி வழங்கப்பட்டது.**

**5.** இம்மாநகராட்சிக்குச் சொந்தமான கீழ்க்கண்ட உரிம இனங்கள் பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி உரிம இனங்கள் ஏலம் கோருவதற்கு ஒருவரும் முன்வரவில்லை. ஆதலால் ஏலம் போகவில்லை.

| வ. எண். | உரிம இனங்களின் விபரம் |
|---|---|
| 1. | பெரிய சேமூர் மண்டலம்–2 பகுதிக்குட்பட்ட கங்காபுரம் பகுதியில் உள்ள தென்னை மர பலன் தரும் மரங்கள் குத்தகை உரிமம். |
| 2. | ஈரோடு மாநகராட்சி மண்டலம்–3 சூரம்பட்டி (பழைய நகராட்சி) எல்லைக்குட்பட்ட சாலை ஓரங்களில் நடைபெறும் சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். |
| 3. | ஈரோடு மாநகராட்சி மண்டலம்–3 சூரம்பட்டி பகுதிக்கு உட்பட்ட 2ஆம் நம்பர் பஸ் நிறுத்தம் அருகில் உள்ள தினசரி மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். |

மேற்கண்ட உரிம இனங்களில் வரிசை எண்.1 கடந்த ஒரு வருட காலமாக தண்ணீர் பற்றாக்குறையின் காரணமாக ஏலம் கோருவதற்கு ஒருவரும் முன்வரவில்லை. வரிசை எண்.2ல் உள்ள உரிம இனம் சாலைகளின் ஓரங்களில் உள்ளதால் விபத்துக்கள் ஏற்பட்டு பொதுமக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது. வரிசை எண்.3ல் உள்ள உரிமம் இனம் மாலை நேரங்களில் மட்டுமே குறைந்த எண்ணிக்கையில் மட்டுமே கடைகள் உள்ளது.

ஆகவே மேற்படி உரிம இனங்களை உரிம இனங்களின் பட்டியலில் இருந்து நீக்கம் செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

அனுமதிக்கலாம்.

**அ1/6100/2012**

**301. ஒத்தி வைக்கப்பட்டது.**

**6.** டான்ஹோப் கூட்டுறவு சங்க மேலாண்மை இயக்குநர் (MANAGING DIRECTOR TAMILNADU HORTICULTURAL PRODUCERS CO-OPERATIVE ENTERPRISES LTD) அவர்களின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் நிறுவனம் காய்கறி மற்றும் பழங்கள், இளநீர் ஆகியவற்றை பொதுமக்களுக்கும், பயணிகளுக்கும் குறைந்த விலையில் விற்பதற்கு ஈரோடு பேருந்து நிலையத்தில் தங்களது சொந்த செலவில் 8’X8’ என்ற அளவில் விற்பனை கூடம் அமைப்பதற்கு காலியிடம் கோரியுள்ளனர். மேற்படி நிறுவனத்தின் உறுப்பினரான திருமதி. எம். சாந்தி க/பெ திரு. ஏ. முருகவேல், எண்.12, எரப்பம்பாளையம், கன்டிகாட்டுவலசு, அவல்பூந்துறை (அ.நி) ஈரோடு என்பவருக்கு கடை நடத்திக் கொள்ள தோட்டக்கலை இணை இயக்குநர், மேலாண்மை இயக்குநர், டான்ஹோப் பரிந்துரை செய்துள்ளார்.

அனுமதி கோரியுள்ள இடம் ஈரோடு மத்திய பேருந்து நிலையம் WARD-A BLOCK 14 T.S.NO.2/1,6,7,8 ஆகும். மேற்படி காலியிடத்தின் மதிப்பு பதிவுத்துறையின் தற்போதைய நில மதிப்பு ஒரு சதுர அடிக்கு ரூ.6000/– ஆகும். எனவே 8’X8’ என்ற அளவில் உள்ள காலியிடம் 64 சதுர அடி நிலப்பரப்பு ஆகும். நில மதிப்பு ஒரு சதுர அடிக்கு ரூ.6000/– வீதம், ரூ.3,84,000/–. இதில் நிலத்திற்கான ஒரு வருட வாடகையாக 10 சதவீதம் ரூ.38,400/–ஐ மனுதாரர் செலுத்திய பிறகு மாநகராட்சியில் விதிமுறைகளுக்குட்பட்டு அனுமதி வழங்குவது தொடர்பாக மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

மாமன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம்.

**இ1/688/15**

**302. ஒத்தி வைக்கப்பட்டது.**

**7. 3–வது மண்டலத் தலைவர் திரு. இரா. மனோகரன் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**

- ஈரோடு மாநகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணி செய்வதற்கு சுமார் 800–க்கு மேற்பட்ட பணியாளர்கள் நியமிக்கப்பட்டு பணி செய்து வருகின்றார்கள். இவர்களுக்கு ஒரு நாள் ஊதியமாக மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்ணயம் செய்த தொகை ரூ.275/– மட்டுமே தற்போது ஊதியமாக பெற்று வருகிறார்கள். இன்றைய காலகட்டத்திற்கு இந்த ஒரு நாள் ஊதியம் போதுமானதாக இல்லை. எனவே, இந்த ஊதியத்தை உயர்த்தி தர மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மறுநிர்ணயம் செய்துதரக்கோரி பரிந்துரை செய்து இம்மாமன்றம் தீர்மானிக்கின்றது.
- ஈரோடு மாநகராட்சி 3–வது மண்டலத்தில் சுமார் 2248 வீதிகளில் 44631 வீடுகளும் சுமார் 128013 பொதுமக்களும் வசித்து வருகிறார்கள். இம்மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட வில்லரசம்பட்டி ஊராட்சி, திண்டல் ஊராட்சி, முத்தம்பாளையம் பஞ்சாயத்து மற்றும் சூரம்பட்டிவலசு ஆகிய பகுதிகள் அதிக சதுர கிலோ மீட்டர் கொண்டுள்ள பகுதிகளாகும். இவ்விடங்களில் திடக்கழிவு மேலாண்மை பணி செய்வதற்கு சிரமமாக உள்ளது. மேலும் இப்பகுதியில் நிலத்தடி நீர் ஆதாரம் மற்றும் காவிரி குடிநீர் பற்றாக்குறையாக உள்ளது. எனவே, இப்பகுதிகளில் உள்ள சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும், தண்ணீர் பற்றாக்குறையை போக்குவதற்காகவும் பொது சுகாதார துறைக்கு புதிதாக டம்பர் பிளேசர்–1, ஜே.சி.பி.–1, டிராக்டர்–1 மற்றும் தண்ணீர் வண்டி–1 ஆகியவைகள் அவசியம் தேவைப்படுவதால் அவற்றை புதிதாக வாங்கி பயன்படுத்திக் கொள்ள இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**303. 3ஆவது மண்டலத் தலைவர் திரு. இரா. மனோகரன் அவர்கள் முன்மொழிய இரண்டாவது மண்டலத் தலைவர் திரு. பி. கேசவமூர்த்தி அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**8. 60–வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. டி. பாலசுப்பிரமணியம் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**

- சோலார் பெட்ரோல் பங்க் பஞ்சாபி ஒட்டல் அருகில் உள்ள கூட்டு ரோட்டினில் விபத்துக்களை தடுக்கும் வண்ணம் ஒரு சிறிய உயர்கோபுர மின்விளக்கு அமைத்துக் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- கோணவாய்க்கால் பகுதியிலிருந்து வெண்டிபாளையம் ரயில்வே நுழைவு பாலம் வரை புதிய மின்கம்பங்கள் அமைத்து அதில் சோடியம் விளக்குகள் பொருத்தித்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**304. 60ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. ட்டி.பாலசுப்ரமணியம் அவர்கள் முன்மொழிய 59ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. கே.ஏ.குப்புசாமி அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**இடம்- ஈரோடு** **மேயர்,**
**நாள்.31.03.2015** **ஈரோடு மாநகராட்சி**